www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com

11ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு - மார்ச் - 2024

## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

**கால அளவு : 3.00 மணி நேரம் ]** **(வினாத்தாள் விடைகளுடன்)** **[ மொத்த மதிப்பெண்கள் : 90**

**அறிவுரைகள் :** **(1)** அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

**(2)** **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**குறிப்பு : (i) அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
**(ii)** கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

[14 × 1 = 14]

**1.** துன்பப்படுபவர் .......................
அ) பொருளைக் காக்காதவர்
ஆ) தீக்காயம் பட்டவர்
இ) நாவைக் காக்காதவர்
ஈ) தீயினால் சுட்டவர்

**2.** 'புல்லின் இதழ்கள்' - நூலின் ஆசிரியர்
அ) பாப்லோ நெரூடா
ஆ) ஸ்டெஃபான் மல்லார்மே
இ) ரவி வர்மா ஈ) வால்ட் விட்மன்

**3.** தவறான இணையைத் தேர்வு செய்க.
அ) கடல் + அலை - உயிர் + மெய்
ஆ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர்
இ) மண் + வளம் - மெய் + மெய்
ஈ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்

**4.** கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | தஞ்சை பெரிய கோயில் | (i) | திருச்சாழல் |
| (2) | சிங்கன் சிங்கி | (ii) | காலத்தை வென்ற கலை |
| (3) | பெண்கள் விளையாட்டு | (iii) | இசைத் தமிழர் இருவர் |
| (4) | சிம்பொனித் தமிழர் | (iv) | குற்றாலக் குறவஞ்சி |

அ) (1) - (iv), (2) - (ii), (3) - (i), (4) - (iii)
ஆ) (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)
இ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)
ஈ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

**5.** சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.
அ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.
ஆ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.
இ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.
ஈ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

**6.** உலகச் சிட்டுக்குருவிகள் நாள் :
அ) ஆகஸ்ட் 9 ஆ) ஜனவரி 18
இ) மார்ச் 20 ஈ) செப்டம்பர் 16

**7.** உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு.
அ) வினையெச்சம், வினைத்தொகை
ஆ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி
இ) பெயரெச்சம், பண்புத்தொகை
ஈ) வினைத்தொகை, இடவாகுபெயர்

**8.** **கூற்று** : "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
**விளக்கம்** : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
அ) கூற்று தவறு, விளக்கம் சரி
ஆ) கூற்று சரி, விளக்கம் தவறு
இ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு
ஈ) கூற்றும் சரி, விளக்கமும் சரி

**9.** புலி போலப் பாய்ந்தான் - எவ்வகை உவமை?
அ) மெய் ஆ) வினை இ) உரு ஈ) பயன்

**10.** ஓர் ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் பற்றிப் பாடும் திணை:
அ) பாடாண் திணை ஆ) பொதுவியல் திணை
இ) குறிஞ்சித் திணை ஈ) வெட்சித் திணை

**11.** நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது:
அ) கனி முன் நிரை ஆ) காய் முன் நேர்
இ) மா முன் நேர் ஈ) காய் முன் நிரை

**12.** மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை :
அ) சிவகாமியின் சரிதம் ஆ) சிவகாமியின் சபதம்
இ) பாஞ்சாலி சபதம் ஈ) இரகசிய வழி

**13.** கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை
(i) மதிப்புக் கூட்டுப் பொருள்கள்
(ii) நேரடிப்பொருள்கள்
அ) இரண்டும் சரி ஆ) (i) மட்டும் சரி
இ) இரண்டும் தவறு ஈ) (ii) மட்டும் சரி

**14.** மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் :
அ) 22 ஆ) 48
இ) 18 ஈ) 24

### பகுதி - II - பிரிவு - 1

**குறிப்பு : எவையேனும் மூன்று** வினாக்களுக்கு விடை தருக.

[3 × 2 = 6]

**15.** "வளருங் **காவில் முகில்தொகை ஏறும்** - பொன் மாடம் எங்கும் அகிற்புகை நாறும்" - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

**16.** படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?

**17.** அகநானூறு எத்தனைப் பிரிவுகளைக் கொண்டது? அவை யாவை?

**18.** "ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள" - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com


**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடையளிக்கவும். [2 × 2 = 4]

19. பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
20. 'தட்சிண மேரு' - குறிப்பு வரைக.
21. சங்க காலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனார் கூற்று யாது?

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். [7 ×2 = 14]

22. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் யாவை? அவை யாவை?
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) ஈன்ற ஆ) முளைத்த
24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) அரும்பொருள் ஆ) மணிக்குலம்
25. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
    அ) குயில் கத்த, நாய் ஊளையிட்டது.
    ஆ) சோறு சாப்பிட்டு, நீர் பருகினான்.
26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    குரை, குறை
27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    அ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்
    ஆ) தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.
28. திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக.
29. கலவைத் தொடராக மாற்றுக.
    மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.
30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்.
    வைகை அல்லது நஞ்சிருக்கும்

**பகுதி - III - பிரிவு - 1**

**குறிப்பு :எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. [2 × 4 = 8]

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
32. 'உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்' - இடம்சுட்டி பொருள் விளக்கம் தருக.
33. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப் படும். - இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.
34. வாய்க்காலின் சிறப்புகளாக மனோன்மணீயம் குறிப்பிடுவன யாவை?

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. [2 × 4 = 8]

35. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
36. ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை?
37. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
38. கொற்கை, வஞ்சி, தொண்டி - வளாகம் பற்றி நீவிர் அறிவன யாவை?

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** விடை தருக. [3 × 4 = 12]

39. அ) சொற்பொருள் பின்வரு நிலையணியை விளக்குக.
    **அல்லது**
    ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
    பார்தாக்கப் பக்கு விடும். - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

**– நாமக்கல் கவிஞர்**

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.
    அ) சிறு துரும்பும் பல்குத்த உதவும்
    ஆ) வினை விதைத்தவன் வினை அறுப்பான்
    தினை விதைத்தவன் தினை அறுப்பான்
42. 'தா' என்ற வேர்ச்சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரமைத்து எழுதுக.
43. தமிழாக்கம் தருக :
    1. All that glitters is no gold.
    2. Self help is the best help.
    3. Tit for Tat.
    4. Prevention is better than cure.

**பகுதி - IV**

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. [3 × 6 = 18]

44. அ) 'காலமறிதல்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
    **அல்லது**
    ஆ) நடராசன் தனி மொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துகளை எழுதுக.
45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்கவும்.
    **அல்லது**
    ஆ) தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரீகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.
46. அ) 'யானை டாக்டர்' - குறும்புதினம் வெளிப்படுத்தும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. **அல்லது**
    ஆ) சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com


**பகுதி - V**

**குறிப்பு : அடிபிறழாமல்** எழுதுக. [4 + 2 = 6]

**47.** அ) 'சிற்றூரும் வரப்பெடுத்த...' எனத் தொடங்கும் - புரட்சிக்கவி பாடல்.

ஆ) 'உலகு' - என முடியும் குறள்

## விடைகள்

**பகுதி - I**

1. இ) நாவைக் காக்காதவர்
2. ஈ) வால்ட் விட்மன்
3. அ) கடல் + அலை - உயிர் + மெய்
4. ஆ) (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)
5. ஈ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.
6. இ) மார்ச் 20
7. ஆ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி
8. ஈ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
9. ஆ) வினை
10. அ) பாடாண் திணை
11. இ) மா முன் நேர்
12. அ) சிவகாமியின் சரிதம்
13. ஆ) (i) மட்டும் சரி
14. அ) 22

**பகுதி - II - பிரிவு - 1**

15. தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும் என்பதே அடிக்கோடிட்ட தொடரின் பொருளாகும்.

16. வீரம், மானம், முன்னோர் வழிநடத்தல், நம்பிக்கைக்குரியவர் ஆதல் ஆகிய நான்கே படைக்குப் பாதுகாப்பாகும்.

17. அகநானூறு மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை,
 (i) களிற்றியானை நிரை (1 - 120 பாடல்கள்)
 (ii) மணிமிடைப் பவளம் (121 - 300 பாடல்கள்)
 (iii) நித்திலக்கோவை (301 - 400 பாடல்கள்).

18. எப்படிப்பட்ட தன்மையுடைய மண்ணையும் மெழுகைவிட சிறந்த முறையில் பதப்படுத்தி உழவுக்கும் உழவருக்கும் உதவும் சிறந்த ஒழுக்கத்தையும், எறும்புகளும், புழுக்களும், பூச்சிகளும் அடித்துத் துன்புறுத்தினாலும் அவைகளைப் பொறுத்துக்கொண்டு அவைகளுக்கும் உதவும் மண்புழுவை இவ்வடி குறிப்பிடுகிறது.

**பிரிவு - 2**

19. (i) எழுத்து மொழியில் எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது. முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.
 (ii) அதனால்தான் பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

20. **தட்சிண மேரு :**
 (i) தட்சிண மேரு என்று குறிப்பிடப்படுவது தஞ்சைப் பெரிய கோவில் ஆகும். இக்கோவில் நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களிலேயே பெரியதும் உயரமானதும் ஆகும்.
 (ii) இராசராச சோழனால் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் முயன்று இது கட்டி முடிக்கப்பட்டது. **'தட்சிண மேரு'** என்று இராசராசனால் பெருமையுடன் அழைக்கப்பட்ட இக்கோவில் விமானம் **216 அடி உயரம்** உடையது.
 (iii) கருவறை விமானம் **13 தளங்களை** உடையது.

21. **மா. இராசமாணிக்கனாரின் கூற்று :**
 (i) "சங்ககாலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது.
 (ii) தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல் சுதந்திரத்தினால், தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சி மொழியாகவும் கல்விமொழியாகவும் சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கி வந்தது" என்பது மா. இராசமாணிக்கனாரின் கூற்றாகும்.

**பிரிவு - 3**

22. (i) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் - 24.
 (ii) உயிரெழுத்துகள் பன்னிரண்டு.
 (iii) மெய்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொரு எழுத்துகளும் சொல்லின் இறுதியில் வரும்.
 (iv) குற்றியலுகரம் ஒன்று.

23. அ) ஈன்ற - ஈன் + ற் + அ
 ஈன் - பகுதி
 ற் - இறந்தகால இடைநிலை
 அ - பெயரெச்ச விகுதி
 ஆ) முளைத்த - முளை + த் + த் + அ
 முளை - பகுதி
 த் - சந்தி
 த் - இறந்தகால இடைநிலை
 அ - பெயரெச்ச விகுதி

24. அ) **அரும்பொருள் = அருமை + பொருள்**
 **விதி 1 :** "ஈறுபோதல்' என்னும் விதிப்படி 'மை' விகுதி கெட்டது. அருமை + பொருள் = அரு + பொருள் என்றானது.
 **விதி 2 :** பின்பு 'இனமிகல்' எனும் விதிப்படி வருமொழி முதல் (பொ) 'ப' கரத்திற்கு இனமாகிய 'ம' கரம் மிகுந்து அரும் + பொருள் = அரும்பொருள் என்றானது.
 ஆ) **மணிக்குலம் – மணி + குலம்**
 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' எனும் விதிப்படி மணி + குலம் = மணிக்குலம் என்றானது.

25. அ) குயில் **கூவ,** நாய் **குரைத்தது.**
 ஆ) சோறு **உண்டு,** நீர் **குடித்தான்.**

26. எங்கள் வீட்டிற்கருகில், இப்போதெல்லாம் நாய்கள் **குரை**க்கும் ஓசை **குறை**ந்துவிட்டது.

27. அ) கல்விக் கேள்விகளில் சிறந்தவர் நன்மை தீமைகளைப் புரிந்து பேசுவர்.
 ஆ) தமிழர் ஆற்றுத் தண்ணீரைத் தேக்கி சேமித்துக் கால்வாய் வெட்டி பாசனம் செய்தனர்.

28. (i) பொதுவானவை
 (ii) நிறுத்தக்குறியீடுகள் தொடர்பானவை
 (iii) இடைவெளி தரவேண்டியவை
 (iv) இணைக்க வேண்டியவை
 (v) எழுத்து வடிவம் என்பவையாகும்.

29. மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை என்பதால் மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்று, சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

30. **வைகை – வை கை**
 (i) வைகையாற்றில் வெள்ளம் பெருகிற்று.
 (ii) மண்ணில் கை வைக்காதே என்று குழந்தையை எச்சரித்தாள் அம்மா.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

**நஞ்சிருக்கும் – நஞ்சு இருக்கும்**

(i) துணி நீண்ட நாட்கள் பயன்படுத்தியதால் அது நஞ்சிருக்கும்.

(ii) பாம்பின் பல்லில் நஞ்சு இருக்கும்.

**பகுதி - III - பிரிவு - 1**

31. **நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவன:**

(i) முகவுரை என்பது நூலுக்கு முன் சொல்லப்படுவது.

(ii) முகவுரையில் நூலின் இயல்பு, ஆசிரியர் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை, நூலாசிரியர் பெயர், நூல் பின்பற்றிய வழி, நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு, நூலின் பெயர், தொகை வகை, விரி என்பனவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு, நூலில் குறிப்பிடப்படும் கருத்து, நூலைக் கேட்போர்(மாணவர்), நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன்.

(iii) இந்த எட்டுச் செய்திகளும் நூல் ஒன்றின் முகவுரையில் இடம் பெற வேண்டும் என நன்னூல் குறிப்பிடுகிறது.

32. (i) **இடம் :** பாவேந்தர் பாரதிதாசன் இயற்றிய 'புரட்சிக் கவி' - காவியத்தில் இத்தொடர் இடம்பெற்றுள்ளது.

(ii) **பொருள் :** குற்றமில்லாத உயர்ந்த மொழியென தமிழை உங்கள் உயிரைவிட மேலானதாகக் கருதிப் போற்றுங்கள், மக்களே! என்று உதாரன் மக்களிடையே கேட்டுக் கொண்டான்.

(iii) **விளக்கம் :** உதாரன், அமுதவல்லி காதலை அறிந்த மன்னன் அவர்களுக்கு மரண தண்டனை விதித்தான். கொலைக்களத்தில் இருவருக்கும் பேச வாய்ப்பளித்தான் அமைச்சன். அப்பொழுது உதாரன் வீரவுரை ஆற்றினான். "அரசன் தன் மகளுக்குக் கவிபாடக் கற்றுக் கொடுக்கச் சொன்னதற்கும், அமுதவல்லி என்மேல் காதல் கொண்டதற்கும் தமிழ்தானே காரணம். அமுதம் போன்ற தமிழ் என் உயிர் போவதற்குக் காரணம் தமிழ் என்று சமுதாயம் நினைத்திடுமோ? அப்படி ஒரு பழி தமிழுக்குண்டானால் தமிழினம் தாங்கிக் கொள்ளுமா?

உங்களிடம் ஒன்று வேண்டுகிறேன். உயர் தமிழை உங்கள் உயிருக்கு மேலாகப் போற்றுங்கள். நான் விடைபெறுகிறேன்" என்று உதாரன் கூறினான்.

33.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| நாச்/செற்/று | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| விக்/குள்/மேல் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| வா/ரா/முன் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| நல்/வினை | நேர் நிரை | கூவிளம் |
| மேற்/சென்/று | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| செய்/யப் | நேர் நேர் | தேமா |
| படும் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாட்டைக் கொண்டு முடிந்தது.

34. **வாய்க்காலின் சிறப்புகள் :**

(i) மக்களுக்கு உணவு தரும் வயலுக்குப் பயன்படும் இந்த வாய்க்கால் செய்யும் தொழில் அற்புதமானது.

(ii) கடலை மலையாகவும், மலையை அலைகடலாகவும் மாற்றும் ஆற்றல் பெற்றது.

(iii) கூழாங்கற்களை நெறு நெறு என அரைத்து தூளாக்கி தூளை மணலாக்குகிறது. தன் வலிமைக்குள் அடங்கிய புல், புழு என அனைத்தையும் கொண்டு வந்து காலதச்சன் கட்டும் மலைக்கு கொடுக்கிறது.

(iv) குகையில் புகுந்து, வெடிப்புகளில் நுழைந்து, பொங்கி எழுந்து, சுனை, ஊற்று, ஆறு, மடுவாக மாற்றம் பெற்று மதகுகளைச் சாடி வாய்க்கால் வழி ஓடி கொணரும் பொருளை உயர்வாக நினைக்க வேண்டும்.

(v) இப்படி நீக்கம் இல்லாத அன்பும் ஊக்கமும் உறுதியும் கொண்டு தினமும் உழைப்பது வாய்க்கால் என வாய்க்காலின் சிறப்புகளாக மனோன்மணீயம் குறிப்பிடுவனவாகும்.

**பிரிவு - 2**

35. **ஆனந்தரங்கரின் வருணனைத் திறன் :**

(i) 8.6.1746ஆம் நாள் லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் புதுவைக்கு வந்தன.

(ii) "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும்,

(iii) இது நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும், தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள். அதைக் காகிதத்தில் எழுத முடியாது" என்று தனது நாட்குறிப்பேட்டில் ஆனந்தரங்கர் கப்பல் வருகையை வருணனை செய்துள்ளார்.

36. **ஐந்து விவசாய மந்திரங்கள்** : ஐந்து விவசாய மந்திரங்களை உலகிற்கு சொன்னவர் மசானபு ஃபுகோகா.

(i) உழப்படாத நிலம்

(ii) இரசாயன உரம் இல்லாத உற்பத்தி

(iii) பூச்சிக் கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு

(iv) தண்ணீர் நிறுத்தாத நெல்சாகுபடி

(v) ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல் ஆகிய ஐந்தும் வேளாண்மை மந்திரங்கள் ஆகும்.

37.

| இலக்கியங்கள் | செய்திகள் |
|---|---|
| புறநானூறு | 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே' |
| நான்மணிக் கடிகை | இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் |
| ஆத்திசூடி | இளமையில் கல் |
| திருக்குறள் | கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்ற யவை. |
| நாலடியார் | கல்வி அழகே அழகு |
| திருமந்திரம் | துணையாய் வருவது தூய நற்கல்வி |

38. **கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் :**

(i) கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் என்னும் ஊர்ப் பெயர்கள் பழந்தமிழர்களின் அரசியல், பொருளியல் மற்றும் பண்பாட்டு உருவாக்கத்தின் விளைவாக உருவானவை.

(ii) சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழ்ச் சமூகத்திற்குக் கொற்கை, வஞ்சி, தொண்டி ஆகிய பெயர்கள் ஆணிவேர் அடையாளங்கள் ஆகும். இப்பெயர்களில் ஒன்றைக்கூட வடமொழி இலக்கியங்கள் பதிவு செய்யவில்லை.

(iii) சங்ககாலத் தமிழ் மன்னர்களின், குறுநிலத் தலைவர்களின் தலைநகரங்கள், துறைமுகங்கள், போர்க்களங்கள் ஆகியவற்றின் பெயர்களோடு வடமேற்குப் பகுதிகளில் உள்ள ஊர்ப்பெயர்கள் பொருந்திப் போகின்றன.

(iv) கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் (KVT COMPLEX) காட்டும் பொதுத் தன்மைகள் மிக முக்கியமானவை. இவை கடந்த கால வரலாற்றிற்கான அடையாளச் சின்னங்கள்.

**பிரிவு - 3**

39. **சொற்பொருள் பின்வரு நிலையணி :**

**அணி விளக்கம் :** ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னரும் பலமுறை வந்து அதே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

**சான்று :** வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

**சான்று விளக்கம் :** செயலின் வலிமையையும் தன் வலிமையையும் பகைவனின் வலிமையையும் துணைவலிமையையும் சீர்தூக்கிச் செயல்பட வேண்டும்.

**அணிப்பொருத்தம் :** இக்குறட்பாவில் 'வலி' என்னும் சொல் மீண்டும் மீண்டும் 'வலிமை' என்ற ஒரே பொருளைக் குறிப்பதால் இது சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

**அல்லது**

**அணிச்சுட்டல்:** இக்குறட்பாவில் இடம் பெறும் அணி உருவக அணி.

**அணி விளக்கம் :** உவமையாக உள்ள பொருளுக்கும் உவமிக்கப்படும் பொருளுக்கும் வேறுபாடு தோன்றாமல் இரண்டும் ஒன்று என்ற உணர்வு தோன்ற இரண்டையும் ஒற்றுமைப்படுத்த உருவக அணியாகும்.

**சான்று :** இரவென்னும் ஏமாப்பில் தோனி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்

**சான்று விளக்கம் :** பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும்.

**அணிப் பொருத்தம் :** இக்குறட்பாவில் இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்துவிடும் என்ற உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்தாமல் ஒன்றே என்று கூறியிருப்பதால் இது உருவக அணி ஆகும்.

**உவமானம்** : பாதுகாப்பு, கொடாமை

**உவமேயம் :** படகு, பாறை

40. **மையக்கருத்து :** இந்தியா சுதந்திரம் பெறவேண்டும் என்பதே மக்களுக்கு மனதில் மகிழ்ச்சி தரும். சுதந்திரம் பெற்றால் தான் ஒரு நாட்டில் அறம் தழைத்து புகழ் ஓங்கும் என்பதே இதன் மையக் கருத்து.

**சீர்மோனை :** **இ**தம்தரும் - **இ**சையுடன்; **ப**தம்தரும் - **ப**ணம்தரும்; **நி**தம்தரும் - **நி**மிர்ந்து

**அடிமோனை :** **சு**தந்திரம் - **சு**கம்தரும் ; **ப**தம்தரும் - **பா**ர்த்தால்; **நி**தம்தரும் - **நி**ச்சயம்

**எதுகைத் தொடை :** சு**த**ந்திரம் - இ**த**ம்தரும்; ப**த**ம்தரும் - நி**த**ம்தரும்

**இயைபு நயம் :** காட்டிலும் வேறுண்டோ? போகமும் கீழன்றோ? வாழ்தலும் வேண்டும்

**அணிநயம் :** இப்பாடலில் இயல்பு நவிற்சியணி பயின்று வந்துள்ளது.

**சுவைநயம் :** வேட்கைச்சுவை (அ) வெகுளிச் சுவை

41.

அ) **சிறு துரும்பும் பல்குத்த உதவும்**

**பழமொழி விளக்கம் :** எந்தவொரு சின்னச் செயலுமே பயனுள்ளதாக அமையும் என்பதனை உணர வேண்டும்.

**வாழ்க்கை நிகழ்வு :** நான் பள்ளியில் படிக்கும் போது என்னுடன் கந்தன் என்ற மாணவனும் படித்து வந்தான். ஓரளவு படிக்கும் மாணவன், ஆனாலும் தினந்தோறும் பள்ளிக்கு வந்து போகும் போது மாணவர்கள் பயன்படுத்தி வீணாக்கிய காகிதங்களைப் பொறுக்கிச் செல்வான்.

"ஏன்டா இந்தக் குப்பைக் காகிதங்களைப் பொறுக்கிற?" என்று நான் அவனிடம் கோபப்பட்டதுண்டு. ஆனால் கந்தன் சிரித்துக் கொண்டே அந்தக் காகிதத் துண்டுகளைத் தனது கூடைக்குள் அள்ளிச் செல்வான். நான் கூட இவன் இந்தக் காகிதத் துண்டுகளை கடையில் போட்டு பணம் சம்பாதிக்கிறானோ என்று எனக்குள்ளே கேட்டதுண்டு. நான் எண்ணியது போல எதுவும் நடக்கவும் இல்லை. கந்தனின் இந்தச் செயல் எங்களது நட்பையே பிரித்து விட்டது. எவ்வளவு கூறியும் கேட்காத இந்தக் கந்தனின் நட்பு எதற்கு என்று நட்பையும் முறித்துக் கொண்டேன். ஆனாலும் அவனது செயல் தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஒருநாள் பள்ளியில் தலைமையாசிரியர், நமது பள்ளியில் ஓர் கண்காட்சி வைக்கப்போகிறேன். கழிவுப் பொருட்களிலிருந்து படைக்கும் பொருள்களின் கண்காட்சி இது என்றார். ஒவ்வொரு மாணவர்களும் வீணான பொருட்களைத் தேடி அலைந்து சேர்த்தனர். கண்காட்சி தொடங்கியது. கந்தன் பேப்பர் கூழினால் செய்த ஒரு மனிதச் சிலையைக் கண்காட்சியில் வைத்தான். அந்தச் சிலை அனைவரையுமே கவர்ந்தது. முதல் பரிசையும் வென்றது. நான் கந்தனின் செயலைக் கண்டு பெருமிதம் கொண்டேன். தினம் தினம் கொண்டு சென்ற காகிதத் துண்டுகளை தண்ணீரில் ஊறவைத்து அதில் வடித்த மனித உருவச் சிலை கண்டு பூரித்துப் போனேன்.

**நீதி :** ஆம்! கழிவுப் பொருட்கள் என்று எதையுமே வீணாக்கக் கூடாது. அதுவும் ஒரு சில நேரத்தில் பயனுள்ள பொருளாக மாறும் என்பது போல, கந்தன் சிறு துரும்பும் பல்குத்த உதவும் என்பதனை நிரூபித்து விட்டான்.

**அல்லது**

ஆ) **வினை விதைத்தவன் வினை அறுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுப்பான்**

**பழமொழி விளக்கம் :** நாம் பிறர்க்குச் செய்யும் வினைகளைப் பொருத்தே விளைவுகள் உண்டாகும். நற்செயல்களைச் செய்தால் நன்மையும் தீய செயல்களைச் செய்தால் தீமையும் விளையும்.

நாம் எதனை விதைக்கிறோமோ அதனையே நாம் அறுவடை செய்வோம். அதனைக் கூறும் பழமொழி ' வினை விதைத்தவன் வினை அறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்பதாகும்.

**வாழ்க்கை நிகழ்வு :** தரணி, தக்ஷன் என்ற இரு நண்பர்கள். தரணி எப்போதும் அனைவருக்கும் உதவி செய்வான், அனைவரையும் மரியாதையாக பார்ப்பான். மரியாதையாகவும் நடந்து கொள்வான். தக்ஷன் தரணியைப் போல் இல்லாமல் அனைவரிடமும் கோபமாக பேசுவான். யாரையும் மதிக்க மாட்டான். யாருக்கும் உதவி செய்ய மாட்டான்.

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com


ஒரு நாள் இருவருக்கும் வேலை கிடைத்தது. வேலையில் சேர முன் பணம் இரண்டாயிரம் கட்ட வேண்டி இருந்தது. இவர்கள் இருவரிடமும் பணம் இல்லை. தரணிக்கு உதவி செய்ய அனைவரும் முன் வந்தனர். நல்லது செய்தால் நல்லது நடக்கும். ஆனால் தக்ஷனுக்கு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை. இந்நிகழ்வு 'வினை விதைத்தவன் வினை அறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்ற பழமொழிக்கேற்ப உள்ளது.

**நீதி :** நாம் ஒருவருக்கு நல்லது செய்தால் நமக்கும் நன்மை நடக்கும். ஒருவருக்குத் தீமை செய்தால் நமக்கு தீமை நடக்கும் என்பதே பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

42. **தா – வேர்ச்சொல்**
 (i) வேல்விழி கயல்விழிக்குப் புத்தகம் தந்தாள். **(வினைமுற்று)**
 (ii) வேல்விழி தந்த புத்தகம் கயல்விழிக்குப் பிடித்திருந்தது **(பெயரெச்சம்)**
 (iii) தலைமையாசிரியர் சான்றிதழ்களைத் தந்து முடித்தார். **(வினையெச்சம்)**
 (iv) தானமாகப் பொருட்களைத் தந்தவர் மகிழ்ந்தார். **(வினையாலணையும் பெயர்)**

43. **தமிழாக்கம் :**
 1) மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
 2) தன் கையே தனக்கு உதவி.
 3) யானைக்கும் பானைக்கும் சரி.
 4) வெள்ளம் வரும்முன் அணைபோட வேண்டும். (அ) வருமுன் காப்பதே சிறந்தது.

**பகுதி - IV**

44.

**அ) காலமறிதலின் பயன் :**

செய்யும் செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தையும் வேண்டிய கருவிகளுடன் அறிந்து செய்தால் அரிய செயல்கள் என்பவை உண்டோ? (முடிக்க முடியாத செயல் எதுவும் இல்லை)

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தை அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தால், உலகமே வேண்டும் எனக் கருதினாலும் கைக்கூடும்.

**ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தால் செயின்.**

**காலம் வரும் வரை காத்திருத்தல் :**

உலகத்தையே ஆள வேண்டும் என்று நினைக்கின்றவர். அதற்கேற்ற காலத்தை எதிர்பார்த்துக் கலங்காது பொறுமையுடன் இருப்பர்.

**விரைந்து செயல்படுதல் :**

ஒருவனுக்குக் கிடைத்தற்கரிய காலம் வாய்க்கும் போதே அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே விரைந்து செய்தற்கரிய செயலைச் செய்து முடிக்க வேண்டும்.

**அல்லது**

**ஆ) முன்னுரை:** மனோன்மணீயம் தமிழில் முதல் பா வடிவ நாடக நூல். லிட்டன் பிரபு எழுதிய இரகசிய வழி என்ற நூலைத் தழுவி 1891-இல் பேராசிரியர் சுந்தரனார் இதைத் தமிழில் எழுதினார். இயற்கையில் ஈடுபாடு கொண்டு, தேனில் தோய்ந்து இணையில்லாத ஊக்கமும் அமையப் பெற்றவர்கள் தமிழர்கள் என்பதை விளக்குவதாக உள்ளது இந்நூல். இதில் நடராசன் என்ற கதைப்பாத்திரத்தின் தனி மொழிகளிலிருந்து புலப்படும் கருத்துக்களைக் காண்போம்.

**இலக்கு:** மனிதன் சோம்பி இருப்பதற்கும், வளர்ச்சி குறைந்ததற்கும் காரணம் அவனுக்குள் இலக்கு இல்லாமல் இருப்பதே ஆகும். எந்த ஒரு செயலாக இருந்தாலும் அதை செய்வார்க்கு ஓர் இலக்கு வேண்டும். அந்த இலக்கை அடைகிறபோது அவனுக்கு அது ஆனந்தத்தைக் கொடுப்பதாக இருக்க வேண்டும் உயிரின் தூண்டுகோலாக இருப்பது இலக்கே ஆகும்.

**புல்லின் பரிவு:** சிறு புல் கூட தனக்கென்று ஓர் இலக்கை வைத்திருக்கிறது. பூங்கொத்தை உயர்த்தி தேனை உணவாக அளித்து, தன் மலர்களைக் காயாக்குவதற்கும், தன் இனத்தை வாழச் செய்வதற்கும் மகரந்தத்தை பரப்புகிறது. தன் குழந்தை வாழவைக்க வேரிடம் அனுப்புகிறது. இப்படிப்பட்ட பொறுமை, முயற்சி, பரிவு, புல்லிடம் காணப்படுகிறது. இவை மனிதனிடமும் காணப்பட வேண்டும். ஆகவே எந்த ஒன்றையும் தாழ்வாக நினையாமல் இருக்க வேண்டும். அப்படி இருப்பவரிடத்து இன்பம் தங்கும்.

**வாய்க்காலின் விசித்திரம்:**
 (i) உணவு கொடுக்கும் வயலுக்குள் பாய்கிறது. உணவை விளைவிக்கிறது. மலையை கடலாகவும், கடலை மலையாகவும் மாற்றுகிறது. அனைத்தையும் கொண்டு சென்று கடலுள் கலக்கிறது.
 (ii) பல்வேறு இடங்களைக் கடந்து பலவற்றைத் திரட்டுகிறது.
 (iii) இரவுப் பகல் பார்க்காமல் ஓயாது உழைத்துக் கொண்டிருக்கிறது? இப்படி உழைப்பவர் யார்? எனவே வாய்க்காலைப்போல அன்பும், ஊக்கமும், உறுதியும் இருக்குமானால் எல்லோரும் பெருமையை அடையலாம்.

**மண்புழுவின் பொதுநலம்:** உழவின் நண்பனாக விளங்கும் மண்புழு, எந்த மண்ணையும் நல்ல மண்ணாக்குகிறது. பிறர் தரும் தொல்லைகளைப் பொறுத்துக்கொண்டு அவருக்கும் நன்மையைச் செய்கிறது. இப்படி மண்புழுவிடம் காணப்படும் ஒழுக்கம், இணையில்லா அன்பு, பொறுமை மனிதர்களிடமும் வேண்டும்.

**முடிவுரை:** புல், புழு, வாய்க்கால் இவைகளிடம் காணப்பட்ட பொறுமை, முயற்சி, பரிவு, அன்பு, உழைப்பு, ஊக்கம், உறுதி, ஒழுக்கம் இவை அனைத்தும் மனிதனிடம் காணப்பட வேண்டும் என்பதே நடராசனின் தனிமொழிகளிலிருந்து அறியும் கருத்துகளாகும்.

45.

**அ) முன்னுரை:**

**மொழி என்பது ஒருவருக்கு மூன்றாவது வகை**

கலைகளின் உச்சம் கவிதை என்பர். அக்கவிதையினை, இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்றும் கூறினார் மகாகவி பாரதி. கவிதை எவ்வாறு நிகழ்கிறது; எழுத்து மொழியைக் கடந்து பேச்சுமொழி எவ்வாறு கவிதைக்கு நெருக்கமாக இருக்கிறது என்பவை பற்றிப்பேசுகிறது இக்கட்டுரை.

**பேச்சுமொழி:**
 (i) எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எனவேதான் இலக்கிய வழக்கைக்(நெறியை) கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com PH: 8124201000 / 8124301000

(ii) அதனால்தான் பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

(iii) பேச்சு என்பது தன்னைத் திறந்துகொள்கிற ஒரு செயல்பாடு. பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேச்சுமொழியின்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன.

(iv) இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர். இதையே அவர்கள் 'நேரடி மொழி' எனக் கருதுகின்றனர்.

**எழுத்துமொழி:**

(i) ஒரு திரவ நிலையில் தான் விரும்பும் வகையில் தன்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்துவிடுகிறது.

(ii) எழுத்து மொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது. எழுத்து என்பது ஒரு வகையில் பார்த்தால் தனக்குத் தானே பேசிக் கொள்கிற பேச்சு.

(iii) பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் மேல் தோல்போல் இயங்கும். ஆனால் எழுத்து மொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்தி மூடிவிடுகின்றன.

**முடிவுரை:** கலைகளின் உச்சம் கவிதை பேச்சுமொழி, எழுத்துமொழி இவைகள் மூலம் எவ்வாறு மொழியை வெளிப்படுத்தலாம் என்பதனை மேற்கண்ட கருத்துக்களின் மூலம் நாம் தெரிந்து கொண்டோம். எழுத்துமொழியைவிட பேச்சுமொழியே மொழியை வெளிப்படுத்தும் சிறந்த கருவியாக இருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

**அல்லது**

ஆ) **முன்னுரை :** நாட்குறிப்பு என்பது தனிமனிதர் ஒருவரின் அன்றாட நிகழ்வுகளை அல்லது பணிகளைப் பதிவு செய்யும் ஏடாகும். 1736 - 1761 வரை இவர் எழுதிய நாட்குறிப்புகள் தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதைப் பற்றிக் காணலாம்.

**தமிழ்ச்சமூகம் :** 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் பற்றிக் குறித்து வைத்துள்ளார். பண்பாடு, சமயம், சாதி, நீதி, வணிகம், நம்பிக்கைகள் முதலான பல்வேறு கூறுகள் அடங்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார்.

**தண்டனை :** புதுச்சேரியில் வீதிகள் எவ்விடத்திலும் காலைக்கடன் கழிப்பவர்களுக்கு ஆறு பணம் தண்டம் விதிக்கப்பட்டது. பல்வேறு காரணங்களுக்காக மரண தண்டனை வழங்கல், காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் போடுதல் முதலிய தண்டனைகள் வழங்கப்பட்டன. தலைமைத் திருடனுக்கு தூக்குத் தண்டனையும், ஏனைய திருடர்களுக்கு காதுகளை அறுத்து, ஐம்பது கசையடிகளும் தரப்பட்டன.

**பீரங்கி முழக்கம் :** நாணயம் அச்சிடும் உரிமை பெற்ற ஆணையை பல்லக்கில் வைத்து ஊருக்குள் கொண்டுவரும்போது 21 பீரங்கிகள் முழங்கியதையும் பிரான்சிலிருந்து புதுவைக்கு கப்பல் வந்தவுடனும் பீரங்கிகள் முழங்கியதையும் நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

**ஈரம் :** புதுவைப் பேரிடரில் மக்கள் உணவு, நீரின்றி வாடினர். அப்போது கனகராயர், பெருஞ்சோறு அளித்துத் தமிழரின் இரக்கத்தையும் ஈரத்தையும் வெளிப்படுத்தியதை ஆனந்தரங்கர் பதிவு செய்துள்ளார்.

**முடிவுரை :** இவ்வாறு ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 25 ஆண்டு கால தென்னிந்திய வரலாற்றினை வெளிப்படுத்தும் புதையலாக விளங்கியது. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு 12 தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது வெளிப்படுத்தும் விரிவான செய்திகளை, வரலாற்றறிஞர் தம் குறிப்புரைகளின் துணையோடு கண்டறிய முடியும்.

46.

அ) **முன்னுரை:** காட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்கும் யானைகளைக் காட்டின் மூலவர் என்பர். மனிதர்கள் அல்லாத உயிரினங்களில் தன்னை அறியும் ஆற்றலைப் பெற்றதும் மனிதர்களின் குணங்களில் பலவற்றைக் கொண்டதுமான யானைகள் நமது பண்பாடு, கலைகளின் பிரிக்க முடியாத கூறாக விளங்குகின்றன. அவற்றுக்குத் தெரிந்தோ தெரியாமலோ நாம் பல்வேறு இன்னல்களை இழைக்கிறோம். 'யானை டாக்டர்' என்னும் குறும்புதினம் வெளிப்படுத்தும் இயற்கை பாதுகாப்பு, இயற்கை விழிப்புணர்வு மற்றும் உயரினப் பாதுகாப்பு குறித்த கருத்துகளை இங்கு காண்போம்.

**இயற்கை பாதுகாப்பு:** இயற்கைக்கு மாறாக அதிகரித்து வரும் நகரமயமாதல், தொழில்மயமாதல், மக்கள் தொகைப் பெருக்கம் போன்ற காரணங்களால் மாசுபட்ட நீர் நிலைகள், வறண்ட நீர் நிலைகள் என இயற்கை வளங்கள் அழிந்து வருகின்றன. நில ஆக்கிரமிப்பு மற்றும் கழிவுகளால் நதி நீர் மாசுபட்டு வருகிறது. தட்பவெப்ப நிலையில் உருவான மாற்றத்தால், போதிய நீர்வளம் இன்றி நீர்வரத்து குறைந்து மிகவும் பாதிப்பைத் தருகிறது. மழை வளம் குறைந்து விட்டது. நதிகள் இன்றைய சூழலில் கழிவுகளைத் தாங்கும் பள்ளமாக மாறி வருவதுதான் வேதனையானது. பெருநகரங்களில் இயங்கும் பெரும்பாலான தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் நிலைகளில் கலக்கப்படுகிறது. நகர விரிவாக்கம், சாலை விரிவாக்கம் செய்யப்படுவதற்காக பெருமளவில் மரங்கள் வெட்டப்படுகின்றன. இதனால், மரங்களில் கூடுகட்டி வாழும் பறவையினங்கள், நிழலில் ஒதுங்கும் விலங்கினங்கள் தங்க இடமின்றி அழிந்துபோகின்றன. மரங்கள் குறைந்ததால் வெப்பம் அதிகரித்து உயிரினங்கள் அழிவைச் சந்தித்து வருகின்றன. இயற்கை வளங்கள் சுரண்டப்பட்டதால் இன்று அளவுக்கு அதிகமான வெப்பத்தை உணருகிறோம்.

**இயற்கை விழிப்புணர்வு:** இயற்கை வளங்கள், மனிதன் உயிர் வாழ பல அற்புதங்களை நமக்கு அளித்து வருகின்றன. நாம் சுவாசிக்கும் காற்று முதல் நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள்களையும் இயற்கை தருகிறது. இயற்கை வளமிக்க பசுமையான சோலைகள், காடுகள், மரங்கள், உயிரினங்கள், புல்வெளிகள், விளைநிலங்கள், ஆறுகள், ஏரிகள், கடலோர நீர் வளம் போன்றவை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்று. எனவே, இயற்கை வளங்களைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமை மட்டுமல்ல, பொறுப்பும் கூட.

இயற்கை வளங்களின் அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை நாம் ஏற்படுத்தி இயற்கையைப் பாதுகாக்க வேண்டும்.

**உயிரினப் பாதுகாப்பு :** இயற்கைச் சமநிலை மாறுபடாதிருக்க வனவிலங்குகளைப் பாதுகாப்பது அவசியம். மரங்கள், தாவரங்கள் பெருக்கத்துக்கும், தட்ப வெப்பநிலை சமன்பாட்டுக்கும் காடுகள் பராமரிக்கப்பட வேண்டியது அவசியம். ஒரு நாட்டின் இயற்கை வளங்கள் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருபவை. விலங்குகள், மரங்கள், தாவரங்கள் இருக்கும் இடங்கள் ஒரு நாட்டின் செழிப்பை உணர்த்துகின்றன. சுற்றுலாப் பயணிகளையும் கவர்கின்றன. உலகிலேயே வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தை முதன்முதலில் ஏற்படுத்திய நாடு இந்தியாதான். 1972ல் இந்தியாவில் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. விலங்குகள் வாழ ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மொத்தக் காட்டுப் பகுதியில் 25% ஒதுக்கப்பட வேண்டும் என சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். நமது மாநிலத்தில் மொத்த வனப்பரப்பில் 29.32 பரப்பளவில் வன உயிரின காப்பகங்கள் உள்ளன.

**முடிவுரை :** இயற்கை வளங்களைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமை மட்டுமல்ல, பொறுப்பும் கூட. இயற்கை வளங்களின் அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை நாம் ஏற்படுத்தி இயற்கையைப் பாதுகாக்க வேண்டும். இயற்கையை பாதுகாப்போம். நாட்டை வளமாக்குவோம்.

**அல்லது**

**ஆ) முன்னுரை :** கலைகளின் மகுடம் இசை! உணர்வுகளுக்கு உயிர் கொடுப்பவை இசைகள். குருதியைச் சூடேற்றும் உயிரை உருக்கும் அமைதியாய் மனதை உருவாக்குபவர்களே இசை மேதைகள். அத்தகைய தமிழகத்தின் மாபெரும் இசைமேதைகளான இளையராஜா, ஏ.ஆர். இரகுமான் ஆகியோர் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளைக் காண்போம்.

**இளையராஜா :** தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரத்தைச் சேர்ந்தவர். அவருடைய இயற்பெயர் இராசையா. தாய் பாடும் தாலாட்டில் தொடங்கித் தமிழ்நாட்டின் அனைத்து இசை வடிவங்களையும் அசைபோட்டு வளர்ந்த தமிழினத்தின் பெருமைக்குரிய இசை மேதை. 'அன்னக்கிளி' என்ற திரைப்படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகம் ஆனார். இவரின் பாடல்களைக் கேட்டால், பாடலின் ஒவ்வொரு சரணத்திற்கு இடையிலும் அவர் சுழற்றும் இசைச் சிலம்பம் நம்மைப் புதிய திசைகளில் பறக்க வைக்கும்.

**இளையராஜாவின் இசைத் தொகுப்பு :** இவர் திரையிசையில் கர்நாடக இசை என்னும் பழந்தமிழிசையின் உன்னதத்தை உணர வைத்தவர்; பல ராகங்களுக்குத் திரையில் கொடுத்த அறிமுக மெட்டுகள் மெல்லிசையில் புதிய உயரங்களைத் தொட்டன. அவரின் எப்படிப் பெயரிடுவேன் (How to Name it) என்னும் இசைத் தொகுப்பும் புல்லாங்குழல் இசைக் கலைஞர் ஹரிபிரசாத் சௌராஸியாவுடன் இணைந்து வெளியிட்ட 'காற்றைத் தவிர ஏதுமில்லை' (Nothing But Wind) என்னும் இசைத் தொகுப்பும் இசையுலகின் புதிய முயற்சிகள் எனக் கொண்டாடப்பட்டன. மகிழ்ச்சி, ஏக்கம், நம்பிக்கை உற்சாகம் வலி போன்ற மனித உணர்வுகளுக்கு இசை வடிவம் கொடுக்க முடியும் என்பதை "இந்தியா 24 மணிநேரம்" என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார். மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப் பாடல்களுக்கு ஆரட்டோரியோ (Oratorio) என்னும் இசை வடிவில் இசையமைத்துள்ளார். 'இராஜாவின் ரமண மாலை', 'இளையராஜாவின் கீதாஞ்சலி' என்னும் தமிழ் இசைத் தொகுப்புகளையும் கன்னட மொழியில் 'மூகாம்பிகை' என்ற பக்தி இசைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார். ஆதிசங்கரர் எழுதிய மீனாட்சி ஸ்தோத்திரம் என்று பக்திப் பாடலுக்கும் இசையமைத்துள்ளார். பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.

**இளையராஜாவின் இசை நுணுக்கம் :** இவர் மேற்கத்திய இசை முறைப்படி பயின்ற காரணத்தால் நாட்டுப்புற இசையின் செவ்வியல் தன்மைகளோடு மேற்கத்திய இசையைக் கலந்து உலவவிட்டார். தமது தேடலின் மூலம் மேற்கத்திய இசையுடன் கர்நாடக, இந்துஸ்தானி இராகங்களையும் திரையிசையில் பயன்படுத்தியிருக்கிறார். நான்கே இசைக் கருவிகளைக் கொண்டு ஒரு பாடலுக்கு இசையமைத்திருக்கிறார். ஆசியாவிலேயே முதன்முதலில் சிம்பொனி என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர். சிம்பொனி இசைப் பணியை எழுதக் குறைந்தது ஆறு மாதமாவது ஆகும். வெறும் பதின்மூன்று நாள்களில் இச்சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்.

**ஆஸ்கர் தமிழர் ஏ.ஆர். இரகுமான் :** ஏ.ஆர். இரகுமான் 1992 ஆம் ஆண்டு ரோஜா என்னும் திரைப்படத்திற்கு இசையமைப்பாளராகத் தமது திரையிசைப் பயணத்தைத் தொடங்கியவர். அவர் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த இசை. பண்பாட்டுக் குறியீடுகளைத் தம் இசையில் தவழவிட்டார். இணைய வழியில் உலவும் இளைஞர்களின் கனவை இசையாக மொழி பெயர்த்துக் காலப் பதாகையில் ஒலி வண்ணம் தீட்டினார். நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை இவற்றுடன் மேற்கத்திய உலகளாவிய இசை முறைகளையும் கலந்து, புதிய கணினித் தொழில்நுட்ப உதவியுடன் உலகத் தரத்தில் இசையமைத்ததுடன் பல இளம் பாடகர்களையும் அறிமுகம் செய்தார். இவர் இசையமைத்த 'வந்தே மாதரம்', 'ஜன கணமன' என்னும் இசைத் தொகுதிகள், நவீன இசை வடிவில் நாட்டுப்பற்று உணர்வை மிளிரச் செய்தன. இவர் இசையமைத்த "வந்தே மாதரம்" ஜன கண மன என்னும் இசைத்தொகுதிகள் நாட்டுப்பற்று உணர்வை வளர்ப்பன. வெவ்வேறு மொழித் திரைப்படத்திற்கும் இசையமைத்தவர். வெவ்வேறு கலாச்சார மக்களையும் தம் இசையால் ஒருங்கிணைத்ததுடன் திரையிசையில் சூ∴பி இசையை அறிமுகப்படுத்திய சிறப்பும் இவருக்குண்டு.

**முடிவுரை :** தமிழர் வாழ்வின் எல்லா நிலைகளிலும் இசைக்கென்று ஓர் இன்றியமையாத இடமுண்டு. அதில், இளையராஜா, ஏ.ஆர். இரகுமான் ஆகியோரின் வருகை புகழ் மகுடமாக ஒளிர்கின்றது. இதற்காகப் பல விருதுகளையும் பெற்று சாதனை படைத்திருக்கின்றனர். இசையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒப்பற்ற கலைஞர்களுக்கு நம் நன்றியுணர்வை என்றும் மறவாதிருப்போம்.

47.

**அ)** சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
**– பாரதிதாசன்**

**ஆ)** நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு. **– திருவள்ளுவர்**

☆ ☆ ☆